இணைப்பு–IV

(445 ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

அறிவிப்புகள், 2009–2010

அறிவிப்பு எண் 1

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்குதல்.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் பணிபுரியும் 1,840 ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்துடன் ரூ. 500/- உயர்த்தி ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/- ஆக வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,10,40,000/- செலவினம் ஏற்படும்.

அறிவிப்பு எண் 2

தொழில்நுட்பப் படிப்பில் முதுகலைப் பட்டப் படிப்பு பயில்பவர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தால் கல்வி உதவித் தொகை வழங்குதல்.

தொழிலாளர் நல வாரியத்தைச் சார்ந்த பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி ஆகிய பட்டமேற்படிப்பு பயிலும் தலா 25 மாணவர்களுக்கு ரூ. 3,000/- வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4.5 இலட்சம் செலவினம் ஏற்படும். வாரிய நிதியிலிருந்து இச்செலவினம் செலவிடப்படும்.

அறிவிப்பு எண் 3

மூக்குக் கண்ணாடிக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை உயர்த்தி வழங்குதல்.

[2009 ஜூலை 9

தொழிலாளர் நல வாரியத்தால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மூக்கு கண்ணாடிக்கான உதவித் தொகை ரூ.400/-லிருந்து ரூ.500/- ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.60,700 கூடுதலாக செலவாகும். வாரிய நிதியிலிருந்து இச்செலவினம் செலவிடப்படும்.

அறிவிப்பு எண் 4

ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் உதவித் தொகையினை உயர்த்தி வழங்குதல்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்பட்டு வந்த ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.52,500 கூடுதலாக செலவாகும். வாரிய நிதியிலிருந்து இச்செலவினம் செலவிடப்படும்.

அறிவிப்பு எண் 5

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மூக்குக் கவசம் (Nose Mask) வழங்குவது.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 500 தொழலாளர்கள் வீதம் பதிவு முன்னுரிமை அடிப்படையில் ரூ.50/- மதிப்பிலான மூக்குக் கவசம் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றிற்கு ரூ.8 இலட்சம் செலவினம் ஏற்படும். இச்செலவினம் வாரிய நிதியிலிருந்து செலவிடப்படும்.

அறிவிப்பு எண் 6

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு காது கேட்கும் கருவி (Hearing Aid) வழங்குதல்.

காது கேளாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 100 தொழிலாளர்கள் வீதம் பதிவு முன்னுரிமை அடிப்படையில் ரூ.1,750/- மதிப்பிலான காது கேட்கும் கருவி வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 56 இலட்சம் செலவினம் ஏற்படும் இச்செலவினம் வாரிய நிதியிலிருந்து செலவிடப்படும்.

2009 ஜூலை 9]

அறிவிப்பு எண் 7

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பகுதி நேரப் பயிற்சி வழங்குதல்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களில் 200 தொழிலாளர்களுக்கு பகுதி நேரப் பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்குவதோடு அவர்களுக்கு ஊதிய இழப்பீடாக தினசரி ரூ. 100/- வீதம் 20 நாட்களுக்கு ரூ. 2,000/- வழங்கப்படும். இதற்கான செலவினம் ரூ. 4 இலட்சம் வாரிய நிதியிலிருந்து செலவிடப்படும்.

அறிவிப்பு எண் 8

இடம் பெயர்ந்து வரும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வளித்தல்.

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கட்டுமானத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு, இடம் பெயர்ந்து வரும் குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் 2009-10 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக துரித கணக்கெடுப்புப் பணிக்கான செலவினத் தொகை ரூ. 2 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் வழங்கப்படும்.

அறிவிப்பு எண் 9

சென்னை குறளகத்தில் இயங்கி வரும் சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகத்தை திருபெரும்புதூருக்கு இடமாற்றம் செய்தல்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு, தமிழக அரசு, எடுத்து வரும் சீரிய முயற்சிகளின் பலனாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1,812 தொழிற் சாலைகளும், திருப்பெரும்புதூர் வட்டத்தில் 472 தொழிற்சாலைகளும் குறிப்பாக பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இங்குள்ள தொழிலாளர்கள் சமரச அலுவலரை எளிதாக அணுகுவதற்காக தற்போது சென்னை, குறளகத்தில் இயங்கி வரும் சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அலுவலகம் திருப்பெரும்புதூருக்கு மாற்றப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 9

தொழிற்சாலைகள் துறை

அறிவிப்பு எண் 10

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிப்பது அதிகரித்தல்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கட்டணம் ஏதுமின்றி மாதம் ஒரு பயிற்சி வகுப்பு தமிழில் தொழிற்சாலைகள் வளாகத்தில் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் நடத்தப்படுகிறது. இனிவருங்காலங்களில் மாதம் இரண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

அறிவிப்பு எண் 11

இரசாயனத் தொழிற்சாலைகளில் ஏற்படும் அபாயகரமான நிகழ்வுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள அவசர கால ஆயத்த நிலை மாதிரி ஒத்திகைகள் நடத்தப்படுதல்.

இரசாயனத் தொழிற்சாலைகளில் எதிர்பாராதவிதமாக ஏற்படும் இரசாயன வாயுக் கசிவு அல்லது தீ விபத்து போன்ற பேரிழப்பினைத் தடுத்திடவும் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாத்திடவும் தொழிற்சாலைகளில் ஆண்டிற்கொரு முறை நடத்தப்படும் அவசர கால ஆயத்த நிலை மாதிரி ஒத்திகைகள் இனி வரும் காலங்களில் பாரதப் பிரதமர் அவர்களது தலைமையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய பேரழிவு மேலாண்மை அதிகாரக் குழுவின் உயர்நிலை வழிகாட்டுதலின் படி முழு அளவில் நடத்தப்படும்.

அறிவிப்பு எண் 12

பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளைத் தடுத்திட விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசுகளைச் சோதனை செய்யும் வெடிக்கும் திடல் ஏற்படுத்துதல்.

பட்டாசு உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படும் பட்டாசுகளை வெடி சோதனை செய்ய அவர்களுக்கு போதிய இட வசதி இல்லாததால் அவ்வப்போது சில வெடி விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இவற்றைத் தவிர்க்க பட்டாசு உற்பத்தியாளர்களால்

2009 ஜூலை 9]

தயாரிக்கப்படும் வெடிகளை சோதனை செய்ய விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு வெடி சோதனை திடல் அமைத்துத் தரப்படும்.

அறிவிப்பு எண் 13

புதிதாக தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம் ஒன்று திருப்பெரும்புதூரில் அமைத்தல்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூரில் தொழிற்சாலைகள் அதிகம் அமையப் பெற்றுள்ளதால் அப்பகுதியில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, தற்போது சென்னையில் செயல்பட்டு வரும் காஞ்சிபுரம், தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம் திருப்பெரும்புதூருக்கு மாற்றம் செய்யப்படும்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

அ. வேலைவாய்ப்புப் பிரிவு

அறிவிப்பு எண் 14

2008 ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சிறப்புப் புதுப்பித்தல் சலுகை.

ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு புதுப்பித்துக்கொள்ள சிறப்புச் சலுகை அளிக்கப்படும்.

அறிவிப்பு எண் 15

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பினை உயர்த்துதல்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் பயன்பெற தற்போது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 24,000/- ஆக உள்ளது. மேலும் பல இளைஞர்கள் இந்தத் திட்டத்தில் பயன்பெறும் வகையில் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2009 ஜூலை 9

அறிவிப்பு எண் 16

மேல்நிலைக் கல்வி பயின்ற மாணவர்களுக்குத் தொலைபேசி வழி தொழில் நெறி வழிகாட்டல்.

மாணவர்கள் உயர் கல்வியைத் தொடரவும், ஆதாயம் தரக் கூடிய பணியினைப் பெறவும், பல்வேறு வேலைவாய்ப்புகளைத் தேர்வு செய்துகொள்வதற்காகவும், மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் உதவிடும் வகையில், பொதுவான தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் தொலைபேசி வழியாக இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு எண் 17

அரியலூர் மாவட்டத்தில் தனியாக ஒரு வேலைவாய்ப்பு அலுவலகத்தைத் துவங்குதல்.

அரியலூர் மாவட்டம் 23-11-2007 முதல் பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் புதியதாக அமைக்கப்படும்.

ஆ. பயிற்சிப் பிரிவு

அறிவிப்பு எண் 18

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு இலவச பேருந்துச் சலுகை வழங்குதல்.

தொழிற் பயிற்சி பெறுபவர்களை ஊக்கப்படுத்திட பள்ளிக் கல்வித் துறையில் உள்ளதுபோல் இலவச பேருந்துச் சலுகை அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கும் நீட்டித்து வழங்கப்படும். இதன்படி 21,322 பயிற்சியாளர்களுக்கு ரூ.384 இலட்சம் செலவிடப்படும்.

அறிவிப்பு எண் 19

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 75 பணிமனை உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்தல்.

2009 ஜூலை 9]

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாதந்தோறும் ரூ.2000/- என்ற தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் 75 பணிமனை உதவியாளர் / பண்டக உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும். இதற்காக ரூ.57.51 இலட்சம் செலவிடப்படும்.

அறிவிப்பு எண் 20

தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் மாணவர்களுக்கான இருக்கை வசதிகளை 30% உயர்த்துதல்

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்காகக் கூடுதல் இருக்கைகள் 30% என உயர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது. அதைப்போலவே தனியார் தொழிற்பயிற்சி மையங்களுக்கும் கூடுதல் இருக்கைகளை 30 சதவீதமாக உயர்த்தி நிரப்பிக்கொள்ள அனுமதி அளிக்கப்படும். இதன்மூலம் ஆண்டுக்கு 5,880 இளைஞர்கள் கூடுதலாகத் தொழிற் பயிற்சி பெறும் வாய்ப்பு ஏற்படும்.

அறிவிப்பு எண் 21

தொழிற் பள்ளிகளில் சேர்க்கைக்கான கல்வித் தகுதியினைத் தளர்வு செய்தல்.

தொழிற் பள்ளிகளில் சேர்க்கைக்கான கல்வித் தகுதியினை பத்தாம் வகுப்பு தோல்வி என்பதை எட்டாம் வகுப்பு தேர்ச்சி என தளர்வு செய்து அமல்படுத்தப்படும். இதனால் அதிகம் பேர் தொழிற்பயிற்சி பெறும் வாய்ப்பு ஏற்படும்.

அறிவிப்பு எண் 22

தொழிற்கல்வி ஆசிரியர் சான்றிதழ் பயிற்சிக்கான வயது வரம்பினைத் தளர்த்துதல்.

தொழிற்கல்வி ஆசிரியர் சான்றிதழ் பயிற்சிக்கான சேர்க்கை வயது வரம்பு 30 என்பதை கல்வித் துறையில் உள்ள படி 40-ஆக உயர்த்தி இந்த வருடம் முதல் அமல்படுத்தப்படும்.

அறிவிப்பு எண் 23

தொழில் பழகுநர் இடங்களை முழுமையாகப் பூர்த்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்.

[2009 ஜூலை 9

தொழில் பழகுர் பயிற்சியினை வழங்குவதில் 100 சதவீதம் பூர்த்தி செய்து சாதனை செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அறிவிப்பு எண் 24

தொழிற் பள்ளிகளில் மாநில திறனாய்வுப் போட்டிகள் அறிமுகப்படுத்துதல்.

தொழிற் பள்ளிகளில் தொழிற்பயிற்சி பெறுவதை ஊக்கப்படுத்த முதற்கட்டமாக 10 தொழில் பிரிவுகளில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு மாநில திறனாய்வுத் தேர்வு போட்டி நடத்தி மாநில அளவில் முதல் இடத்தைப் பெறுகின்றவர்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொ.அ.ஈ.)

அறிவிப்பு எண் 25

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 10 புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுடன் சித்தேரி, வள்ளியூர், குன்றத்தூர்-மாங்காடு, நெய்வேலி, இராமையன்பட்டி, துலுக்கப்பட்டி, ஜலகண்டபுரம், புஞ்சைபுகளூர், வேப்போடை மற்றும் சோழவரம் ஆகிய 10 புதிய பகுதிகளில் தற்போதுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைத்து விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் 20,493 தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்.

அறிவிப்பு எண் 26

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் புதிய மருந்தகங்கள் துவக்குதல்.

'5 மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் வால்பாறையிலும், '3 மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் பஞ்சட்டி, அன்னூர் மற்றும் எஸ்.எஸ். குளம், நெல்லியம், மதுராந்தகம் மற்றும் தக்கலை ஆகிய இடங்களிலும் மற்றும் '2 மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் சுங்குவார்சத்திரம், பள்ளிகொண்டா மற்றும் மணவாளக் குறிச்சியிலும் தொழிலாளர்களுக்கென துவங்கப்படும். இதன்மூலம் 64,805 தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS